ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

विद्या नाधिगता कलङ्करहिता वित्तं च नोपार्जितं
शुश्रूषापि समाहितेन मनसा पित्रोर्न सम्पादिता ।
आलोलायतलोचनाः प्रियतमास्स्वप्नेऽपि नालिङ्गिताः
कालोऽयं परपिण्डलोलुपतया काकैरिव प्रेर्यते ॥

भर्तृहरिः ॥

ஸத்குருக்கள் மூலமாய் தோஷமில்லாத உத்தமவித்தைகள் கிரகிக்கப்படவில்லை, பொருள்ஸம்பாதிக்க வேண்டுமென்கிற அதிக ஆவல் இருப்பினும் அதுவும் தேடப்படவில்லை, நம் தாய்தந்தைகளுக்கு பக்தி சிரத்தையுடன் பணிவிடையும் செய்யப்படவில்லை, சிற்றின்பசுகமும் ஸ்வப்பனத்தில்கூட நம்மால் அனுபவிக்கப்படவில்லை. இம்மானிடப் பிறவியில் நாம் ஜீவித்திருக்கும்வரை காகங்களைப்போல் பிறரால் கொடுக்கப்படும் ஒருகபள அன்னத்தில் அதிக ஆசைகொண்டு நமது காலம்கழிக்கப்படுகின்றது.

மனுஷ்ய ஜன்மாவையடைந்த தன்சரீரம் ஒரு கார்யத்திற்கும் உபயோகப்படாமல் வீணாகக் காலம்கழிக்கப்படுகிறதென்று மனவருத்தங்கொண்ட ஒரு அறிஞர் அடியில்வருமாறு கூறுகின்றார்.

சகலசுகங்களுக்கும் முக்கியஸாதனமாய்விளங்கும் கல்விபொருளும் ஸத்குருக்கள் மூலமாய் நம்மால் அடையப்படவில்லை. இவ்வுலக போகங்களுக்கு அவசியமான செல்வமும் சம்பாதிக்கப்படவில்லை. நம்மால் அவசியமாய் பரிபாலிக்கப்படவேண்டிய மாதாபிதாக்களும் பாதுகார்க்கப்படவில்லை. அக்ஞர்களால் ஆராதிக்கப்படும் மிகவும் இழிவான விஷயசுகத்தையும் நாம அனுபவிக்கவில்லை. இந்தஜன்மா ஒருவிதமான கார்யத்திலும் உபயோகப்படாமல் எவர் எங்கு பிண்டம் போடுகிறார் என்று எதிர்பார்த்து எப்பொழுதும் காக்கைகளைப்போல் அதைக்கொண்டு வயிறு வளர்த்து காலம்போக்குவதே இந்த ஜன்மாவுக்குப்பயனாக ஏற்பட்டது. அந்தோ கஷ்டம்!

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

குரோதன-௵ வைகாசி-மீ கருஉ

சண்டாளஜாதி தத்வ நிரூபணம்.

(௫௮௫-வது பக்கத்தொடர்ச்சி)

சண்டாளன் என்கிற பெயர்கூட சுருதிகளில்இல்லை என்று சிலருக்கு ஏற்பட்டிருந்த சங்கையை எம்மால் அறியப்பட்ட சில சுருதிவசனங்களை நிரூபித்து நிவர்த்திசெய்தோம். இனி ஸ்மிருதிகள் இத்தீண்டாமை விஷயமாய் எவ்விதம் கருதுகின்றன என்பதையும் விசாரிக்கவேண்டியது அவசியமாகையால் அவைகளில் பிரஸித்திபெற்ற மனுஸ்மிருதியின் அபிப்பிராயத்தை முந்திவெளியிட்டுப்பின்மற்றுமுள்ளஸ்மிருதிகளின்கருத்தையும்கவனிப்போம்

1. மனு பிரதிலோமஜாதியைக் கூறுமிடத்தில்

शूद्रादायोगवः क्षत्ता चण्डाळश्चाधमो नृणाम् ।
वैश्यराजन्यविप्रासु जायते वर्णसङ्करः ॥ 10-12.

சூத்திரனிடமிருந்து முறையே வைசிய, க்ஷத்திரிய, பிராம்மண ஜாதிகளிலுண்டான ஸ்திரீகளிடம் ஏற்படும்சந்ததிகளுக்கு ஆயோகவன், க்ஷத்தா, சண்டாளன், என்றுபெயர். இவர்களுக்குள் சண்டாளனென்பவன் ஜாதியினால் தாழ்ந்தவன் என்று மனு கூறியிருக்கிறார்.

மறுபடியும் இதே அபிப்பிராயத்தை

आयोगवश्च क्षत्ता च चण्डाळश्चाधमो नृणाम् । 10-16.

ஆயோகவன், க்ஷத்தா, சண்டாளன் இம்மூன்றுபேர்களும் மானிடஜாதிகளில் தாழ்ந்தவர்கள் என்றும் மொழிந்திருக்கிறார். இவ்வி

தம்கூறிப் பிறகு சண்டாளர்கள் வஸிக்கவேண்டிய ஸ்தானத்தை யும் இயற்கையாய் அனுஷ்டிக்கவேண்டிய தர்மங்களையும் அடியில் வருமாறு அவரே வெளியிடுகின்றார்.

चण्डाळश्वपचानां तु बहिर्ग्रामात्प्रतिश्रयः ।
अपपात्रश्च कर्तव्या धनमेषां श्वगर्दभम् ॥ 10-51.
वासांसि मृतचेलानि भिन्नभाण्डेषु भोजनम् ।
कार्ष्णायसमलङ्कारः परिव्रज्या च नित्यशः ॥ 52.
न तैस्समयमन्विच्छेद् पुरुषो धर्ममाचरन् ।
व्यवहारो मिथस्तेषां विवाहस्सदृशैस्सह ॥ 53.
अन्नमेषां पराधीनं देयं स्याद्भिन्नभाजने ।
रात्रौ न विचरेयुस्ते ग्रामेषु नगरेषु च ॥ 54.
दिवाचरेयुः कार्यार्थं चिह्निता राजशासनैः ।
अबांधवं शवञ्चैव निर्हरेयुरिति स्थितिः ॥ 55.
वध्यांश्च हन्युः सततं यथाशास्त्रं नृपाज्ञया ।
वध्यवासांसि गृह्णीयुः शय्याश्चाभरणानि च ॥ 56.

"சண்டாளன், சுவபசன் இவர்களுக்குக் கிராமத்திற்கு வெளியில்தான் குடியிருப்பு, அவர்களிடம் பாத்திரங்கள் இருக்கக் கூடாது, அவர்களுடைய சொத்து நாயும் கழுதையும், பிரேத வஸ்திரங்கள்தான் வஸ்திரம், போஜனம் உடைந்த சட்டிகளில் தான், ஆபரணம் இரும்பினால் செய்தது, எப்பொழுதும் அலைச் சல். தர்மம் அனுஷ்டிக்கும் எவனும் அவர்களுடன் ஒப்பந்தம் செய்யக்கூடாது. அவர்கள் வியவகாரங்கள் அவர்களுக்குள்தான். விவாஹமும் அவர்களுக்குச் சமானமானவர்களுடன்தான். அவர் களுக்கு அன்னம் உடைந்த பாத்திரத்தில்வைத்து வேறொருவ னால் கொடுபடவேண்டும். கிராமங்களிலும் நகரங்களிலும் ராத் திரி காலத்தில் சஞ்சாரம் செய்யக்கூடாது. பகலில் ராஜாவின்

உத்திரவினால் அடையாளம் செய்யப்பட்டவர்களாகக் காரியத்தை உத்தேசித்து மாத்திரம் சஞ்சரிக்கலாம். பந்துக்களில்லாத பிரேதத்தை அவர்கள் அப்புறப்படுத்தவேண்டுமென்று ஏற்பாடு. ராஜாக்ஞையால்கொலை செய்யவேண்டியவர்களை சாஸ்திரானுசாரமாகக் கொலை செய்யவேண்டியது. கொலை செய்யப்பட்டவர்களுடைய வஸ்திரங்களையும், படுக்கைகளையும், ஆபரணங்களையும் எடுத்துக்கொள்ளவேண்டியது"

பின்னும்,-दिवाकीर्तिमुदक्यां च पतितं सूतिकां तथा ।

शवं तत्स्पृष्टिनं चैव स्पृष्ट्वा स्नानेन शुध्यति ॥ 5-88.

சண்டாளன், பஹிஷ்டாஸ்திரீ, பதிதன், பிரஸவித்தவள், பிரேதம் இவர்களைத்தொட்டவன் ஆகிய இவர்களைத்தொட்டால் ஸ்நானம் செய்து சுத்தியடைகிறான் என்று மனு 5-வது அத்தியாயத்தில் கூறியிருக்கிறார்.

2. கௌதம ஸூத்திரம்.

पतितचण्डालसूतिकोदक्याशवस्पृष्टितत्स्पृष्ट्युपस्पर्शने सचेलमुदकोपस्पर्शनाच्छुद्धिः ॥

"பதிதன், சண்டாளன், பிரஸவித்தவள், பஹிஷ்டாஸ்திரீ, பிரேதம் இவர்களைத் தொட்டவன், தொட்டவனைத் தொட்டவன் இவர்களைத் தொட்டால் வஸ்திரத்துடன் ஜலத்தில் ஸ்நானஞ் செய்ய சுத்தனாவான்" என்று கௌதமர் கருதுகிறார்.

३ याज्ञवल्क्यस्मृतौ ।

ब्राह्मण्यां क्षत्रियात्सूतो वैश्याद्वैदेहकस्तथा ।

शूद्राज्जातस्तु चण्डालः सर्वकर्मबहिष्कृतः ॥

பிராமண ஸ்திரீயினிடமிருந்து முறையே க்ஷத்ரியன், வைசியன், சூத்திரன் இவர்களுக்குண்டானவர்கள் ஸூதன், வைதேஹகன், சண்டாளன் என்று கிரமமாகப் பெயரையடைகிறார்கள். அவர்களுக்குள் சண்டாளன் ஒருகர்மாவுக்கும் அருகமில்லாதவன்.

பிராயச்சித்தாத்தியாயத்தில்.

उदक्या शुचिभिस्स्नायात्संस्पृष्टस्तैरुपस्पृशेत् ।

"பஹிஷ்டாஸ்திரீ அசுசி இவர்களால் தொடப்பட்டால் ஸ்நானம் செய்யவும்" என்ற இடத்தில் அசுசீ என்ற பதத்திற்கு விக்ஞானேச்வரர் இவ்விதம் வியாக்யானம் செய்கிறார்.

अशुचयः, शवचाण्डाळपतितसूतिकाद्याः, शावाशौचिनश्च ।

"அசுசி யென்பது பிரேதம், சண்டாளன், பதிதன், பிரஸவித்தவள் முதலானவர்களும் சாவு தீட்டுள்ளவர்களும்."

அவ்விடத்திலேயே அநேகம் ஸ்மிருதிகளை உதாஹரிக்கிறார்கள். அவர் வியாக்யானமான மிதாக்ஷரையானது இன்னமும் நம்முடைய வியவகாரங்களில் முக்கிய பிரமாணமாயிருந்துவருவதும் தவிர கோர்ட்டுகளிலும் அதன் பிரமாணத்தை அனுசரித்தே சகல சொத்து பாத்தியங்களும் தீர்மானிக்கப்படுகின்றன. இந்தத் தீண்டாமை விஷயத்தில் மாத்திரம் அம்மஹானுடைய வாக்குக்குப் பிரமாணம் கிடையாதென்று யாரால் சொல்லமுடியும்?

४ देवलः ।

श्वपाकं पतितं व्यङ्गमुन्मत्तं शवहारकम् ।
सूतिकां साविकां नारीं रजसा च परिप्लुताम् ॥
श्वकुक्कुटवराहांश्च ग्राम्यान्संस्पृश्य मानवः ।
सचेलस्सशिरास्स्नात्वा तदानीमेव शुध्यति ॥

"சண்டாளன், பதிதன், அங்கஹீனன், பைத்தியம், பிரேதம் சுமப்பவன், பிரஸவித்தஸ்திரீ, பிரஸவம் பார்த்தவள், பஹிஷ்டாஸ்திரீ, நாய், கோழி, பன்றி இவர்களைத்தொட்ட மனிதன் வேஷ்டியுடன் தலையை நனைத்து ஸ்நானம்செய்தால் உடனே சுத்தியாகிறான்." (தேவலர்)

பின்னும்- चण्डाळकूपभाण्डस्थमज्ञानादुदकं पिबेत् ।
स तु त्र्यहेण शुध्येत शूद्रस्त्वेकेन शुध्यति ॥

"சண்டாளர்களுடைய கிணறு, பாத்திரம் இவைகளிலுள்ள ஜலத்தைத் தெரியாமல் சாப்பிட்டால் மூன்றுநாள் உபவாஸத்தால் சுத்தியடைகிறான். சூத்திரன் மாத்திரம் ஒருநாளில் சுத்தமாகிறான்." (தேவலர்)

5. வியாக்ரபாதர்.

चण्डाळं पतितञ्चैव दूरतः परिवर्जयेत् ।
गोवाळव्यजनादर्वाक्सवासा जलमाविशेत् ॥

"சண்டாளன், பதிதன் இவர்களைக்கண்டால் தூர விலகவேண்டும். பசுவின் வால்வீசும் தூரத்திற்குக்குறைந்தால் வஸ்திரத்துடன் ஸ்நானம் செய்யவேண்டும்" இவ்வசனம் விலக இடமில்லாத சமயத்திற்கு ஏற்பட்டது.

6. விசாலமாக இடமிருந்தால் பிரகஸ்பதி பகவான்,

युगं च द्वियुगं चैव त्रियुगं च चतुर्युगम् ।
चण्डाळसूतिकोदक्या पतितानामधःक्रमात् ॥

பதிதனுக்கு ஒரு நுகத்தடிதூரமும், பஹிஷ்டாஸ்திரீக்கு இரண்டும், பிரஸவித்தவளுக்கு மூன்றும், சண்டாளனுக்கு நான்கும் முறையே விலகவேண்டும்.

पतितं सूतिकामन्त्यं शवं स्पृष्ट्वा च कामतः ।
स्नात्वा सचेलं स्पृष्ट्वाग्निं घृतं प्राश्य विशुध्यति ॥
शवस्पृशं दिवाकीर्तिं चितिं यूपं रजस्वलाम् ।
स्पृष्ट्वा तु कामतो विप्रः स्नानं कृत्वा विशुध्यति ॥

பதிதன், பிரஸவித்தவள், அந்தியன், (சண்டாளன்) பிரேதம் இவைகளைத் தெரிந்து தொட்டால், வஸ்திரத்துடன் ஸ்நானம் செய்து அக்னியையும் ஸ்பரிசித்து, நெய்யைப் பிராசனம்செய்தால் சுத்தியாகிறான். பிரேதத்தைத் தொட்டவன், சண்டாளன்,

சிதை, யூபஸ்தம்பம், ரஜஸ்வலே இவர்களைத்தெரிந்து தொட்டபிராமணன் ஸ்நானத்தினால் சுத்தனாகிறான்.

7. அங்கிரஸ்.

यस्तु छायां श्वपाकस्य ब्राह्मणोऽतिरोहति ।
तत्र स्नानं प्रकुर्वीत घृतं प्राश्य विशुध्यति ॥

"சண்டாளனுடைய நிழலை பிராமணன் மிதித்தால் ஸ்நானம் செய்து நெய்யைப் பிராசனம் செய்தால் சுத்தியாகிறான்." (அங்கிரஸ்)

चण्डाळपरिगृहीतं तु योऽज्ञानादुदकं पिबेत् ।
तस्य शुद्धिं विजानीयात्प्राजापत्येन नित्यशः ॥

"சண்டாளனால் எடுத்துவைக்கப்பட்ட ஜலத்தைத் தெரியாமல் குடித்துவிட்டால் பிராஜாபத்யத்தினால் எப்பொழுதும் சுத்தியடைகிறானென்று அறியவும். (அங்கிரஸ்)

அங்கிரஸ் ஸ்மிருதியில் வினா.

चण्डाळकूपभाण्डेषु यस्त्वपः पिबते द्विजः ।
प्रायश्चित्तं कथं तेषां वर्णे वर्णे विनिर्दिशेत् ॥

தீண்டாதவர்களுடைய கிணற்றிலும், பாத்திரத்திலும் இருக்கும் ஜலத்தைக் குடிக்கும் துவிஜர்களுக்கும், சூத்திரர்களுக்கும் யாது பிராயச்சித்தம் கூறப்பட்டிருக்கின்றது?

விடை.

चरेत्सान्तपनं विप्रः प्राजापत्यं तु भूमिपः ।
तदर्धं तु चरेद्वैश्यः पादं शूद्रस्समाचरेत् ॥

வேதியராயின் ஸாந்தபனம் என்கிற பிராயச்சித்தத்தை அனுஷ்டிக்கவேண்டும். அரசனாயிருந்தால் பிராஜாபத்தியமென்கிற பிராயச்சித்தத்தைச் செய்துகொள்ளவேண்டும். வைசிய சூத்திரர்களாயிருப்பின் முறையே பிராஜாபத்தியத்தின் பாதி

யையும், கால்பாகத்தையும் அனுஷ்டிக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கின்றது. பின்னும்,

यस्तु चण्डालसंस्पृष्टं पिबेत्तोयमकामतः ।
स तु सान्तपनं कृच्छ्रं चरेच्छुध्यर्थमात्मनः ॥ 9.

எவன் சண்டாளனால் ஸ்பர்சிக்கப்பட்ட ஜலத்தை அறியாமல் பானம் செய்கின்றானோ அவன் தனக்குச்சுத்திஏற்பட வேண்டிய தற்காக கிருச்ரஸாந்தபனம் என்கிற பிராயச்சித்தத்தைச் செய்து கொள்ளவேண்டும். என்று மறிவிக்கிறார்.

8. ஸம்வர்த்தர்.

चण्डालपतितच्छायां स्पृष्ट्वा स्नानं समाचरेत् ।

"சண்டாளன், பதிதன், இவர்களுடைய நிழலைத்தொட்டால் ஸ்நானம் செய்யவேண்டும்" (ஸம்வர்த்தர்)

९ प्रजापतिः ।

अस्नात्वैव यदा भुङ्क्ते पिण्डं दत्वा पितुर्यदि ।
स्पृष्ट्वा शवमुदक्यां वा चण्डालं सूतिकां तथा ।
अकामतस्त्रिरात्रं स्यात् बुद्ध्या सान्तपनं चरेत् ॥

"பிதாவிற்குப் பிண்டதானம் செய்தபிறகாவது, பிரேதம், பஹிஷ்டாஸ்திரீ, சண்டாளன், பிரஸவித்தவள் இவர்களைத்தொட்டாலாவது ஸ்நானம் செய்யாமலே எந்த பிரும்மசாரிபோஜனம் செய்கிறானோ அவன் தெரியாமல் செய்தால் மூன்றுநாள் உபவாஸமும் தெரிந்து செய்தால் ஸாந்தபனவிருதமும் அனுஷ்டிக்கவேண்டும்" (பிரஜாபதி)

१० व्याघ्रः ।

चण्डालोदक्या संस्पृष्टौ स्नानमेव समाचरेत् ।
अस्पृश्यस्पर्शनं कृत्वा यदा भुङ्क्ते ग्रहाश्रमी ॥

अकामतस्त्रिरात्रं स्यात् षड्रात्रं कामतश्चरेत् ।
यतिश्चैव वनस्थश्च कुर्यातां तौ तदेव तु ॥

"சண்டாளன், பஹிஷ்டாஸ்திரீ இவர்களைத்தொட்டால் ஸ்நானமே செய்யவேண்டும். தொடக்கூடாதவர்களைத் தொட்டுவிட்டு கிருஹஸ்தன் போஜனம் செய்தால், தெரியாமல்செய்தால் மூன்று நாளும், புத்திபூர்வமாய் செய்தால் ஆறுநாளும் உபவாஸம் செய்யவேண்டும். ஸந்யாஸிக்கும் வானப்ரஸ்தனுக்கும் இதேமாதிரி தான்' (வியாக்ரர்)

११ विष्णुः ।

उदक्या शवचण्डाळा न स्नेहास्थि नरोद्भवम् ।
स्पृष्ट्वा सचेलः स्नायीत ।

"பஹிஷ்டாஸ்திரீ, பிரேதம், சண்டாளன், பசையில்லாத மனித எலும்பு இவைகளைத்தொட்டால் வஸ்திரத்துடன் ஸ்நானம் செய்யவும்"

चण्डाळोदकसंस्पृष्टः स्नानं कृत्वा विशुध्यति ।

சண்டாளனுடைய ஜலத்தினால் தொடப்பட்டவன் ஸ்நாநம் செய்யசுத்தனாகிறான். (விஷ்ணு)

१२ वृद्धयाज्ञवल्क्यः ।

चण्डालपुक्कसम्लेच्छभिल्लपारसिकादिकम् ।
महापातकिनश्चैव स्पृष्ट्वा स्नायात्सचेलकम् ॥

"சண்டாளன், புக்கஸன், மிலேச்சன், பில்லன், பாரஸிகன், முதலானவர்களையும் மஹா பாதகம் செய்தவர்களையும் தொட்டால் வஸ்திரத்துடன் ஸ்நானம் செய்யவேண்டியது" (விருத்தயாக்ஞவல்க்யர்)

१३ बोधायनः ।

चण्डाळदर्शने ज्योतिषां दर्शनं संभाषणे ब्राह्मणसंभाषणं स्पर्शने स्नानम् ॥

சண்டாளனைப்பார்த்தால் ஸூர்ய, சந்திர, நக்ஷத்திரங்களைப் பார்க்கவும். பேசினால் உடனே பிராம்மணனுடன் பேசவும். தொட்டால் ஸ்நானம் செய்யவும். (போதாயனர்)

श्वपाकं वापि चण्डालं विप्रः सम्भाषते यदि ।
द्विजसम्भाषणं कुर्यात् सावित्रीं तु सकृज्जपेत् ॥
चण्डालैस्सह सुप्तं तु त्रिरात्रमुपवासयेत् ।
चण्डालैकपथं गत्वा गायत्रीस्मरणाच्छुचिः ॥
चण्डालदर्शने सद्य आदित्यमवलोकयेत् ।
चण्डालस्पर्शनेचैव सचेलं स्नानमाचरेत् ॥

14. பராசரர்.

சுவபாகன், சண்டாளன், இவர்களுடன் பிராம்மணன் ஸம்பாஷணம் செய்தால் உடனே ஒரு பிராம்மணனிடம் ஸம்பாஷணம்செய்து காயத்திரியை ஒருதடவை ஜபிக்கவேண்டும். சண்டாளர்களுடன் ஒரே இடத்தில் தூங்கினவனை மூன்றுநாள் உபவாஸமிருக்கச் செய்யவேண்டும். சண்டாளனுடன் ஒரே மார்க்கத்தில்போனால் காயத்திரீ ஸ்மரணத்தினால் சுத்தியாகிறான். சண்டாளனைப்பார்த்தால் உடனே சூர்யனைப்பார்க்கவேண்டும். சண்டாளனைத்தொட்டால் வஸ்திரத்துடன் ஸ்நானம் செய்யவேண்டும். (பராசரர்)

மேலும் चण्डालखातवापीषु पीत्वा सलिलमग्रजः ।
अज्ञानाच्चैकभक्तेन त्वहोरात्रेण शुध्यति ॥
चण्डालभाण्डसंस्पृष्टं पीत्वा कूपगतं जलम् ।
गोमूत्रयावकाहारस्त्रिरात्राच्छुद्धिमाप्नुयात् ॥
चण्डालघटसंस्थं तु यत्तोयं पिबति द्विजः ।
तत्क्षणात्क्षिपते यस्तु प्राजापत्यं समाचरेत् ॥

यदि न क्षिपते तोयं शरीरे यस्य जीर्यति ।
प्राजापत्यं न दातव्यं कृच्छ्रं सांतपनं चरेत् ॥
चरेत्सांतपनं विप्रः प्राजापत्यमनन्तरः ।
तदर्धं तु चरेद्वैश्यः पादं शूद्रस्तथाचरेत् ॥

"சண்டாளர்களால் வெட்டப்பட்டகிணறுகளிலிருந்து தெரியாத்தனமாய் பிராம்மணன் ஜலம் சாப்பிட்டுவிட்டால் ஒருபகலும் ராத்திரியும் ஒருவேளை ஆகாரத்துடனிருந்தால் சுத்தியாகிறன். சண்டாளனுடைய பாத்திரத்தினுல் தொடப்பட்ட கிணற்றுஜலத்தை குடித்தால் கோமுத்திரம் யாவகம் இவைகளைமாத்திரம் சாப்பிட்டுக்கொண்டு மூன்றுநாளிருந்தால் சுத்தியடைகிறன், சண்டாளனுடைய குடத்தில் வைத்திருக்கும் ஜலத்தை பிராம்மணன் சாப்பிட்டு உடனே துப்பிவிடுவானுகில் பிராஜாபத்யம் விருதம் இருக்கவேண்டும். துப்பாமல் ஜலம் தேகத்தில் ஜரித்துவிடுமாகில் பிராஜாபத்யம் போதாது. ஸாந்தபன கிருச்ரம் அனுஷ்டிக்க வேண்டும். பிராஹ்மணன் ஸாந்தபனமும், க்ஷத்திரியன் பிராஜாபத்யமும், வைசியன் அதில் பாதியும், சூத்திரன் கால்பங்கும் அனுஷ்டிக்கவேண்டியது"

பின்னும்- भाण्डस्थमन्त्यजानां तु जलं दधि पयः पिबेत् ।
ब्राह्मणः क्षत्रियो वैश्यश्शूद्रश्चैव प्रमादतः ॥
ब्रह्मकूर्चोपवासेन द्विजातीनां तु निष्कृतिः ।
शूद्रस्यचोपवासेन तथा दानेन शक्तितः ॥

"சண்டாளன் உள்பட எல்லா அந்த்யஜர்களையும்பற்றிப் பராசரர் சொல்கிறர் பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன் அல்லது சூத்திரன் இவர்களில் யாராவது சண்டாளனுடைய பாத்திரத்திலிருக்கும் ஜலம், தயிர், பால் இவைகளை தோஷமென்று தெரிந்துகொள்ளாமல் அருந்தினர்களேயாகில் முதலான மூன்று ஜாதிகளும் பிர்மகூர்ச்சம் என்கிற பிராயச்சித்தத்தைச்செய்து உபவாஸ

மிருந்தால் சுத்தர்களாவார்கள். சூத்திரர்களாயிருப்பின் உபவாஸத்தாலும் சக்தியையனுஸரித்து தானம்செய்வதாலும் சுத்தர்களாகிருர்கள்'' என்று பராசரஸம்ஹிதையில் கூறியிருக்கிருர்.

ப. பஞ்சாபகேச சாஸ்திரி,
ஸ்ரீஜகத்குரு சங்கராசார்யஸ்வாமிகள் மடம்
ஆஸ்தானவித்வான் ஆர்யதர்மம்பத்திராதிபர்.
ஆர். கிருஷ்ணஸாமி அய்யர், எம்.ஏ.,பி.எல்.,
ஹைகோர்ட்டு வக்கீல்.

காஞ்சீபுரத்தில் ஆசார்ய ஜயந்தீ.

(288-வது பக்கத்தொடர்ச்சி)

ஆகவே இதைக்காட்டிலும் வேறு பரம்பராப்பிரமாணம் யாதுவேண்டும். மற்றும் ஆசார்யாள் ஜனனத்திற்குப் பிறகு கொண்டாடுவதே விசேஷமென்றும் நினைக்கலாம். இது நிற்க, இவ்விதம் ஆசார்யாளை திவ்ய மண்டபத்தில் அமர்த்தியதும் 10 தினங்களிலும் அடியிற்கூறப்பெறும் பண்டிதர்கள் திவ்யோபன்யாஸங்களால் சமஸ்த ஜனங்களுக்கும் ஆஸ்திக்யத்தையும் ஆசார்ய பக்தியையும் ஸ்திரமாய் இருக்கும்படி அவ்வளவு அழகாய் வாக்குமாரிபொழிந்தனர். அவ்விதம் செய்ததில் முதல்நாளும் மறுநாளும் பணையூர் பிர்மஸ்ரீ சேஷகிரிதீக்ஷிதரவர்கள் முறையே ஆசார்யாவதாரத்தையும் ஆசார்யர்களின் பாஷ்யமும் அதன் உபயோகமும் என்பதைப்பற்றியும் வெகு திறமையாய் உபன்யசித்து வந்த ஜனங்கள் யாவரையும் பரவசமாய் ஆக்கினர். இவர்கள் வேதபாகத்தில் எந்தவிடத்திலும் தடங்கலின்றி அர்த்தம் சொல்வதற்கும் அவைகளை சமயத்திற்குத் தக்கவாறு உபயோகிப்பதற்கும் ஆசார்யானுக்கிரகம் பெற்றிருக்கின்றனர். பிறகு 30-4-25லும் மறுதினத்திலும் முறையே கன்மயோகம், குருபஸதனம் என்னும் விஷயங்களை உபன்யஸிக்கும்படி எனக்கேற்பட்ட சபையோர்களின் ஆக்ஞைக்கிணங்கி அவ்விதமே நடந்துகொண்டேன். பிறகு 2-ம் தேதி பிர்மஸ்ரீ

கச்சபேசுவர சாஸ்திரிகளவர்களால் வைராக்கிய மகிமையும், 3-ல் பிர்மஸ்ரீ ராமனுதசாஸ்திரிகளவர்களால் புருஷார்த்தம் என்னும் விஷயமும், 4-ல் கல்பட்டு பிர்மஸ்ரீ ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களால் யோகஸாரம் என்னும் விஷயமும் அழகாய் உபன்யஸிக்கப் பட்டது. இதில் கல்பட்டு ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்கள் கவிதா சக்தி யுள்ளவர்களென்பதற்கிணங்கத் தமது உபன்யாஸ முழுவதையும் சுலோக ரூபமாகவே எழுதியிருந்ததும் யோகத்தில் தமக்கேற்பட்டிருக்கும் பரிசயத்தையும் காட்டி சபையை சந்தோஷப் படுத்தினர். பிறகு 5, 6, 7 இம்மூன்று தேதிகளிலும் சென்னை சம்ஸ்கிருத காலேஜ் பிரின்ஸிபால் சாஸ்திர ரத்னகரம் மீமாம்ஸாரத்னம், மீமாம்ஸா கண்டீரவ மகாமகோபாத்தியாய பிர்மஸ்ரீ வெங்கடசுப்பா சாஸ்திரிகளவர்களால் முறையே தர்மம், ஞானம், மோக்ஷம் என்று மூன்று விஷயங்கள் உபன்யசிக்கப் பட்டதில் ஒவ்வொன்றின் சாரத்தைப்பற்றி முழுமையும் சொல்ல முடியாவிடினும் தர்மத்தைக் கேட்டவர்கள் தர்மஸ்வரூபத்தையும் அவ்விதமே ஞானத்தையும் மோக்ஷத்தையும் அடைந்துவிட்டதாகவே சபையோர்கள் ஆனந்தித்தனர் என்பதொன்றே போதும். 7-ம் தேதியாகிய கடைசி தினத்தில் ஸ்ரீ காமாக்ஷி தேவியையும் ஸ்ரீ மதாசார்ய மூர்த்தியையும் எழுந்தருளச்செய்து அம்பாளுக்கு முன்னிலையில் ஸ்ரீமதாசார்யர்கள் தரிசனம் செய்து கொண்டு பின்னல் நடந்துபோவதுபோல் இருமூர்த்திகளையும் பிரதக்ஷிணக்கிரமமாய் எழுந்தருளச்செய்து மகாமண்டபத்திலமர்த்தினர். உடனே ஸ்ரீமகாதேவிக்கு நைவேத்தியமும் ஷோடசோபசாரங்களும் தீபாராதனையையும் நடத்தி தேவிஸன்னிதியில் எதிர்முகமாய் எழுந்தருளியிருக்கும் ஆசார்யமூர்த்திக்கு மங்களவாத்யங்களுடன் பரிவட்டம்கட்டி ஸ்ரீதேவியின் திவ்யமாலையை ஆசார்யாளுக்கு ஸமர்ப்பித்து சடாரி என்னும் ஸ்ரீதேவியின் பாதுகைகளை ஆசார்யாளின் திவ்யசிரஸில்வைத்துப் பிறகு பகவத்பாதருக்கும் நைவேத்தியம் முதலியவற்றைச் செய்தனர். இதை அப்போதுதரிசித்த ஆஸ்திகர்கள்யாவரும் ஸ்ரீமதாசார்ய பிம்பமென்றும் காமாக்ஷிபிம்பமென்றும் நினையாமலே பகவத்பாதரே ஸாக்ஷாத்தாய்தேவியின் எதிரில் நின்றுகொண்டு பக்திபுரஸ்

ஸாமாய்தேவியின் அனுக்கிரகத்தைப் பெற்றுக்கொள்வதாயும் இவ்விதம்தான் மானிடனுய்ப் பிறந்தயாவராலும் அனுஷ்டிக்கப் பாலது என்பதை உபதேசித்ததுபோலவும்.

न मे पार्थास्ति कर्तव्यं त्रिषु लोकेषु किञ्चन ।
नानवाप्तमवाप्तव्यं वर्त एव च कर्मणि ॥

அர்ஜுனு எனக்கு இம்மூவுலகிற் செய்யவேண்டியது யாதொன்று மில்லை. அடையப்படாததொன்று அடையவேண்டியதாய் இருக் கிறது என்பதற்குமில்லை. ஆயினும் கர்மாவில் இருக்கவேதான் இருக்கிறேனென்ற கீதாசார்யரூபமாய் நின்றுதான் உபதேசித்த சுலோகத்தின் கருத்தையும் விளக்கவந்திருக்கிருரென்றே நினைக் கும்படி தோன்றிற்று. இவ்வித வைபவங்களை அனுபவித்துப் பர வசப்பட்ட ஜனங்களுக்குத் தகுந்தாற்போல் பிர்மஸ்ரீ சாஸ்திரிக ளவர்கள் மோக்ஷம் என்ற விஷயத்தைப்பற்றி உபன்யஸித்தார் கள். இதன் பிறகு வித்வான்களுக்கும் பாராயணம் செய்துவந்த பெரியோர்களுக்கும் கிரமமான சன்மானங்கள் செய்யப்பட்டன. இவ்விதம் மிக உத்தமமான திவ்ய வைபவத்தைத் தரிசிக்கும்படி குருசரணங்களின் அநுக்ரகத்தால் பாக்கியம் பெற்றேன். ஆகவே இந்த திவ்யக்ஷேத்திரத்தில் ஆசார்யஸன்னிதியையும், ஸ்ரீகாமாக்ஷி ஸன்னிதியையும், இம்மகோத்ஸவ வைபவத்தையும் ஆஸ்திகர் யாவரும் தரிசிக்கவேண்டியதென்பதற்காகவே இவவளவுதூரம் சொல்லவந்தேன். இனி இந்த க்ஷேத்திரத்தின் அமைப்பையும் ஸ்ரீகாமாக்ஷியின் வைபவத்தையும் ஸ்ரீமதாசார்யாளின் மகிமை யையும் அடுத்த பத்திரிகையில் வெளியிடுகிறேன். சுபம்.

எம். என். சுப்ரமண்யசாஸ்திரிகள்.

கோனுப்பட்டில் ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவம்.

இவ்வூரில் கடந்த இரண்டு வருஷங்களாக இவ்வுத்ஸவத் தைச் சிறப்பாக நடாத்திவரும் மகா-ா-ஸ்ரீ T. R. நாராயணசாமி அய்யரவர்கள் வழக்கம்போல் இவ்வருஷத்திய சங்கரஜயந்தி உத்

ஸவத்தையும் தமது கிருகத்தில் நடாத்திவைத்தார் என்பதைப் பார்க்கினும் அதிற் சில விசேஷங்களைமட்டும் சுருக்கிக்கூறுதலும் அவசியமாகும். கருணாநிதியான ஸ்ரீ சிவபெருமான் இற்றைக்கு சுமார் 2434 வ்ருஷங்களுக்குமுன் இப்புண்ய பூமியின்கண்ணே ஸ்ரீ சங்காசார்யராக அவதாரம்புரிந்து மனிதகோடிகளுக்குஆத்ம ஞான அமுதமளித்து ஜகத்குரு ஸ்தானம் தோன்றச்செய்தருளிய நன்னாளாகிய 28—4—25 மங்களவாரத்தன்று காலையில் ஸ்ரீ சங்கரபகவத் பாதங்களுக்கு உபநிஷத் பாராயணத்துடன் அபிஷேகமும், அவர்களது திருவுருவங்களுக்கு அர்ச்சனை பூஜையும் நடைபெற்றவுடன் குடுமியாமலை பிர்மஸ்ரீ K. A. கல்யாணசுந்தர சாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீ சங்கரவிஜய கதாபிரசங்கமும் ரஸமாக நடத்தப்பெற்றது. புதனன்று புதுக்கோட்டை பிடில் வித்வான் பிர்மஸ்ரீ கணபதி அய்யரவர்களின் இனிய பாட்டுக்கச்சேரியும், புதுக்கோட்டை ஸ்ரீமான் ராமச்சந்திர அய்யரவர்களின் மிருதங்கத்துடன் நடைபெற்றது. வியாழக்கிழமை இரவு புதுக்கோட்டை பிர்மஸ்ரீ தம்முடுபாகவதரவர்கள் ஸ்ரீ ராமதாஸ் சரித்திரத்தை வெகு உருக்கமாகவும் அழகாகவும் செய்தனர். வெள்ளிக்கிழமை மாலை பிர்மஸ்ரீ பிடில் கணபதி அய்யரவர்களின் பாட்டுக்கச்சேரியும் ஸ்ரீ ஜகத்குரு ஸன்னிதானத்தில் செய்யப்பெற்றது. ஒரு ஊரில் ஒருவர் ஒரு நலஞ்செய்ய அதற்குத் துணையாகப் பலர் பக்க உதவிசெய்யுங்கால் அவ்வொருவர் செய்யும் நற்காரியத்தின் பயனும் அவவூருக்குப் பொதுவில் கிடைத்தல் வாஸ்தவந்தான் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. கடந்த இரண்டு வருஷங்களாக ஷை நாராயணஸாமி அய்யர் ஸ்ரீ சங்கரஜயந்தி உத்ஸவத்தை நடாத்திவந்த நற்காரியத்தின் பயனாகப்போலும். இவ்வருஷம் சங்கரஜயந்தி மஹோத்ஸவம் நடத்தும் தருணத்தில் ஸ்ரீஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் அவர்கள் இவ்வூருக்கு விஜயம் செய்யுமாறு நிகழ்ந்தது எனப் பலபக்தர்களும் கருதுவது போல் கூறவும் இடமுண்டு. ஸ்ரீ ஜகத்குரு ஸ்வாமிகள் அவர்கள் மடத்தில் இவ்வுத்ஸவத்தை மிகச் சிறப்பாக நடத்திக்காட்டியதுடன் ஷை நாராயணசாமி அய்யர் நடாத்திவரும் உத்ஸவத்தையும் சிறக்கச்செய்து அனுக்கிரகிக்கவிரும்பி ஸ்திரவாரத்தன்று ஷை

மடத்தின் ஆஸ்தான வித்வானும், ஆர்யதர்மம் பத்திராதிபருமாகிய பிர்மஸ்ரீ V.S. வெங்கட்டராம சாஸ்திரிகள் அவர்களின் வாயிலாய் ஒரு அரிய உபன்யாசமும் நடைபெறச்செய்தனர். பிர்மஸ்ரீ சாஸ்திரிகள் அவர்களின் உபன்யாசத்தைக் கேட்டோர் யாவரும் அவர்களை என்றும் மறக்கமுடியாதென்பது நிண்ணம். சிறுவருள்ளத்திலும் பதியுமாறு அவர்கள் செய்யும் சிறந்த சாஸ்திரோபதேச மொழிகளை ஒவ்வொரு கிராமவாசிகளும் கேட்டு ஆனந்திக்க வேண்டும். பெரிய விஷயங்களைச் சிறிய உதாரணங்களால் அனுபவத்தில் விளக்கிக்கூறும் திறமை சாஸ்திரிகளவர்களுக்கு பிறவிச்செல்வமாக அமைந்திருக்கின்றதென்றே கூறுதல் பொருந்தும். ஸ்ரீ பகவானுக்கு அர்ப்பணமாக—ஆத்மார்த்தமாக—கருதி நடாத்தப்பெறும் இவ்வுத்ஸவமானது என்றும் நடைபெறுமாறு எல்லாம் வல்ல இறைவன் துணைசெய்வாராக. குருபக்தியும் தெய்வபக்தியும் குறைந்துவருகின்ற இந்நாளில் ஆஸ்திக சிகாமணிகளாயுள்ள பெரியோர் அவ்விரண்டையும் பிரதி கிராமங்களிலும் தழைக்கச்செய்யுமாறு அவர்களுடைய ஞாபகத்திற்கு வரையலானேன். நல்லது யார் செய்தாலும் நல்லதே.

கால நிலை.

கால இயற்கைக்குத் தக்கவாறு கதிரவன் கொடுமை அதிகந்தானாயினும் ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் இவ்வூருக்கு விஜயம் செய்ததன்மூலமாக, தண்ணீர் தட்டால் வருந்துகின்ற இந்த சமஸ்தானவாசிகளின் சிரமத்தை அறிந்து அவர்களின் மடத்தில் நடாத்திய "வாருண ஸமித்ஹோமத்தின்" பயனாய் இச்சமஸ்தானத்தின் பல பகுதிகளிலும் இதனைச்சூழ்ந்த வெளிப்பிரதேசங்களிலும் இப்பொழுது நாள்தோறும் மழை பெய்துவருகிறது. தவமிகுந்த பெரியார் விஜயமும், மந்திரசக்தியும் பெருகுந்தோறும் இம்மாநிலத்தின் கால இயற்கை—அவற்றிற்கேற்ப—மாறுதலும் நன்மையாதலும் இயல்பன்றோ?

கோனுபட்டு. டி. கே. ராமபத்திரசர்மா.